ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : தங்கபாண்டி (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : தங்கராஜ் |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 28/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2026

( 1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். 6வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(மனு எண்.1783/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

2. எங்கள் ஊரில் சுமார் 200, 300 வீடுகள் உள்ளது. எங்கள் ஊரில் இருந்து காவல் நிலையம் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. எங்கள் ஊரில் பஞ்சாயத்து நடந்ததில் எதிரிகள் யாரும் பஞ்சாயத்தார்கள் கிடையாது என்றால் சரிதான். நான் புகாரில் படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன். எனது வீட்டின் முன்பாக சம்பவம் நடந்ததாகதான் புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் நானும், எனது தங்கை மட்டும்தான் வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான், வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் போட்ட சத்தத்தில் எதிரிகள் சென்றுவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது வீடு கிழக்கு திசை பார்த்த வீடு ஆகும். வீட்டில் முன் பகுதியில் வறாண்டா போன்ற அமைப்பு உள்ளதா என்றால் இல்லை, ஹால் உள்ளது, அதற்கு அடுத்து ரூம் உள்ளது, ஹாலின்

அளவுகள் தெரியாது. அத்தியாவசியமான பொருட்கள் ஹாலில் உள்ளது என்றாலும், ஹால் சிறிதாக இருக்கும் என்றாலும் சரிதான். வீட்டில் பொருட்களுக்கு சேதாரம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

3. பஞ்சாயத்தில் எதிரிகளை தவிர அங்கு இருந்த வேறு நபர்கள் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி வீடு, எனது வீட்டிலிருந்து 100 மீட்டர் தள்ளி உள்ளது. எனது வீட்டின் தெற்கு பகுதியில் பாட்டி வீடு உள்ளது. சாட்சி ராஜா என்பவர் எனது சித்தப்பா என்றால் சரிதான். அவர் எங்களுடன்தான் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வருகிறார். அவருக்கு சொந்தமான வீடு எங்கள் வீட்டிலிருந்து சுமார் 300, 400 மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த வீட்டையும் எனது சித்தப்பா புழங்கி வருகிறார் என்றால் சரிதான். சாப்பிடும் நேரங்களை தவிர மற்ற நேரங்களில் அவர் அவரது வீட்டில் இருப்பார் என்றால் சரிதான்.

4. சம்பவம் சுமார் 1 1/2 மணி நேரம் நடந்தது. காவல் நிலையத்திற்கு முதலில் நான் மட்டும்தான் சென்றேன், எனது தங்கையை பின்னால் அழைத்து வந்தார்கள். எனது அம்மா மற்றும் சித்தப்பாவை போலீசார் வீட்டில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு செல்ல சுமார் அரை மணி நேரம் ஆனது. நான் புகார் கொடுத்த சமயம் இரவு 12.00 மணி இருக்குமா என்றால் ஞாபகமில்லை. நான் புகாரை கைப்பட எழுதி காவல் நிலையத்தில் இருந்த ஏட்டு (காவலர்)விடம் கொடுத்தேன். நான் புகாரை எழுதி கொடுத்ததற்கும், அதை காவலர் வாங்கி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கும் ஒரு மணி நேரம் இருக்குமா என்றால் இருக்கும்.

5. நான் மருத்துவமனை செல்வதற்கு முன்பு காவல் நிலையத்திலிருந்து மருத்துவ நமூனா எதுவும் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். நான் சம்பவம் நடந்த மறுநாள் காலையில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். எனது தங்கையும் மறுநாள் காலையில்தான் மருத்துவமனை சென்றார் என்றால் சரிதான். என்னையும், எனது தங்கையையும் வெளிநோயாளியாகதான் சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு

சென்றேன் என்று நேரம் சரியாக ஞாபகமில்லை. புகாரில் எனது தங்கை 1 1/2 மாத கர்ப்பிணியாக இருந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னர் போலீசார் விசாரணையில் தவறுதலாக எழுதிக் கொடுத்துவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

6. பஞ்சாயத்து நடந்ததில் நானோ, எனது தகப்பனாரோ எதுவும் பேசியதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்திற்கு அம்மாவைதான் அழைத்தார்கள் என்றால் சரிதான். நான் எனது அம்மாவுடன் சென்றேன் என்றால் சரிதான். ஊர் பஞ்சாயத்து நடக்க யாராவது பிராது கொடுத்தால்தான் அழைப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் பஞ்சாயத்து நடத்த பிராது எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வேறு தரப்பினர் யாரும் பிராது கொடுத்தார்களா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. சின்னழகன் சம்பந்தப்பட்ட வீடு சம்பந்தமான பஞ்சாயத்து என்ற நிலையில், சின்னழகன் என்பவர் எனது தாயாரின் தகப்பனாரோ அல்லது தந்தையின் தகப்பனாரோ கிடையாது என்றால் சரிதான். சின்னழகன் என்பவருக்கு பாத்தியமான வீட்டில்தான் நாங்கள் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். அந்த வீட்டில் அனுமதியின் பேரில்தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான்.

7. சம்பவ சமயம் சின்னழகன் என்பவர் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா, கொட்டாம்பட்டி அருகே உள்ள வேலாயுதம்பட்டி என்ற இடத்தில் சின்னழகன் வசித்து வருகிறார். அவர் தாவா வீட்டில் குடியில்லாததால் அனுமதியின் பேரில் நாங்கள் அவரது வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த வீட்டை கிரையம் வாங்கிக் கொள்ள சொல்லி சின்னழகன் சொன்னார் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்காததால் பழனிச்சாமி என்பவர் தாவா வீட்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடு சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நீதிமன்றத்தில் வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தற்போது அந்த வீட்டில் பழனிச்சாமி குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

8. நாங்கள் தற்பொழுது குடியிருக்கும் வீட்டின் எதிர்புறம் கடை உள்ளது என்றால் சரிதான். அங்கு வைத்து 3ம் எதிரி நல்லியப்பன் என்பவர் உறவினர்களுக்குள் எதுக்கு பிரச்சனை, சமரசமாக சென்றுவிடலாம் என்று பேசினார் என்றால் சரிதான். அதனால் மறுநாள் 10.09.2019ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் எனது அப்பாவும், சித்தப்பாவும் நல்லியப்பன் வீட்டிற்கு சென்று இவ்வாறு பேசுவதற்கு நீ யார் என்று பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. அப்பொழுது அருகில் இருந்தவர்கள் எதற்காக குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்கிறீர்கள் என்று சத்தம் போட்டு அனுப்பி வைத்தார்கள் என்றாலும், அதன் பின்னிட்டு எதிரிகள் புகார் கொடுத்து விடுவார்களோ என்ற அச்சத்தில் எங்கள் வீட்டில் வந்து எதிரிகள் எங்களை அடித்து பிரச்சனை செய்ததாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும், நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் எனது தங்கையின் நைட்டியை பிடித்து இழுத்ததாகவும், எனது தங்கை கர்ப்பிணியாக இருந்ததாகவும், எதிரிகள் ஆபாசமாக பேசியதாகவும் மிகைப்படுத்தி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. ஊரில் உள்ள நபர்கள் பற்றிய விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். புகார் மனுவில் மேலும் சில நபர்கள் என்று தெரிவித்துள்ள நிலையில் போலீசார் விசாரணையில் அவர்களை பற்றி சொன்னேனா என்றால் அவர்களை பற்றி தெரியாததால் சொல்லவில்லை, தெரிந்தவர்களை பற்றி மட்டும் சொன்னேன். எதிரிகள் 7 பேரும் என்னை விட வயதில் மூத்தவர்கள் என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே வழக்கை பெரிதாக காட்ட அதிக நபர்கள் வந்து தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.12 19:07:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 2 PW- 2

| | |
|---|---|
| Name | : ராஜா (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னு |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2026

( 1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். 6வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(மனு எண்.1783/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

2. அ.சா.1 எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு முன்பாக பழனிச்சாமி என்பவருடன் அதிகாலை 3.00 மணியளவில் பேசிக் கொண்டிருந்தபோது, போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 300 அடி தூரம் இருக்கும். போலீசார் சம்பவ இடத்தை வரைபடம் வரைந்து அதில் கையொப்பம் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். 10.09.2019ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், எனது அண்ணன் தங்கராஜ் என்பவரும் 3ம் எதிரி நல்லியப்பன் வீட்டிற்கு சென்று நீ எப்படி ஆலோசனை சொல்லலாம் என்று கேட்டு குடிபோதையில் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. அந்த பிரச்சனையில் இருந்து தப்பிக்க எதிரிகள் மீது

**எனது அண்ணன் மகன் மூலமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் ஒரு கையொப்பம்தான் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.12 19:08:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 5 PW- 3

| | |
|---|---|
| Name | : **காந்திமதி (கண்ணுற்ற சாட்சி)** |
| Father's/Husband's Name | : **தங்கராஜ்** |
| Village | : **துவராபதி** |
| Taluk | : **நத்தம்** |
| District | : **திண்டுக்கல்** |
| Age | : 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2026

( 1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். 6வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(மனு எண்.1783/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

**2. 09.09.2019ம் தேதி பெட்டிக் கடையில் வைத்து எதற்கு உறவினர்களுக்குள் பிரச்சனை, சமாதானமாக போய்விடலாம் என்று 3ம் எதிரி நல்லியப்பன் ஆலோசனை சொன்னார் என்றால் சரிதான். நல்லியப்பன் சொல்லிய விபரங்களை வீட்டில் தெரிவித்து கலந்து பேசிக் கொண்டோம் என்றால் சரிதான். எனது கணவர் மற்றும் கணவரின் தம்பி மறுநாள் நல்லியப்பன் வீட்டிற்கு சென்று எங்கள் விசயத்தில் ஆலோசனை சொல்ல நீ யார் என்று குடிபோதையில் பிரச்சனை செய்தார்கள் என்றாலும், அங்கிருந்தவர்கள் அவர்களை சத்தம் போட்டு போக சொல்லி அனுப்பி வைத்தார்கள் என்றாலும், எதிரிகள் வழக்கு தாக்கல் செய்து விடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது மகன்**

**கொடுத்த புகாருக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்தது போன்றும், அதை பார்த்தது போன்றும் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.12 19:08:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 4 PW- 4

| | |
|---|---|
| Name | : வெள்ளையம்மாள் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னு |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 75/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2026

( 1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். 6வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(மனு எண்.1783/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

2. நானும், எனது மகன் தங்கராஜும் தனித்தனி வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல, ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறோம். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது என்றாலும், சம்பவ சமயம் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நேரடியாக நான் எதையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது மகன் சொல்லிக் கொடுத்து முதல் விசாரணையில் தெரியாத விசயத்தை தெரிந்ததாகவும், பார்க்காததை பார்த்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.12 19:08:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 6 PW- 5

| | |
|---|---|
| Name | : தங்கராஜ் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னு |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2026

( 1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். 6வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(மனு எண்.1783/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை)**

2. 09.09.2019ம் தேதி பெட்டிக் கடையில் வைத்து எதற்கு உறவினர்களுக்குள் பிரச்சனை, சமாதானமாக போய்விடலாம் என்று 3ம் எதிரி நல்லியப்பன், 5ம் சாட்சியும் எனது மனைவியுமான காந்திமதி என்பவரிடம் ஆலோசனை சொன்னார் என்றால் சரிதான். நல்லியப்பன் சொல்லிய விபரங்களை அவர் என்னிடம் சொல்லி வீட்டில் கலந்து பேசிக் கொண்டோம் என்றால் சரிதான். நானும், எனது தம்பியும் மறுநாள் நல்லியப்பன் வீட்டிற்கு சென்று எங்கள் விசயத்தில் ஆலோசனை சொல்ல நீ யார் என்று குடிபோதையில் பிரச்சனை செய்தோம் என்றாலும், அங்கிருந்தவர்கள் எங்களை சத்தம் போட்டு போக சொல்லி அனுப்பி வைத்தார்கள் என்றாலும், எதிரிகள் வழக்கு தாக்கல் செய்து விடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகன் என்றால்

சரிதான். அ.சா.2 எனது சகோதரர் என்றால் சரிதான். அ.சா.3 எனது மனைவி என்றால் சரிதான். அ.சா.4 எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயார், எனது தம்பி தனித்தனி வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது மகன் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்தது போன்றும், அதை பார்த்தது போன்றும் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.01.12 19:08:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்